புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | சனவரி 06, 2022 | புரட்சி 20 | முழக்கம் 45 | விலை: ரூ.3.00

## ஊரடங்குக் கட்டுப்பாடுகளுக்கிடையே கழக செயல்பாடுகள்

# 2021இல் கழகம் கடந்து வந்த பாதை

*2020ஆம் ஆண்டைத் தொடர்ந்து 2021ஆம் ஆண்டிலும் கொரானா பாதிப்புகளால் மக்கள் கூடுகை தடை செய்யப்பட்ட சூழலில் திராவிடர் விடுதலைக் கழகம், மக்கள் சந்திப்பு இயக்கங்களையும் கருத்தரங்குகள் – பொதுக் கூட்டங்களையும் ஏனைய இயக்கங்களைபோல் நடத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது.*

**அவ்வப்போது கட்டுப்பாடுகள் தளர்த்தப் பட்ட நிலையில் கழக நிகழ்ச்சிகள் நடந்தன. ஆனாலும் இணையம் வழியாகக் கருத்தரங்குகள் தொடர்ந்து நடத்தப்பட்டன. கூட்டமைப்புகள் நடத்திய ஆர்ப்பாட்டங்களிலும் கழகம் தனியாக ஆர்ப்பாட்டங்களையும் நடத்தின.**

**கொரானா மோசமான நிலையில் ஊரடங்கு கட்டுப்பாடுகள் கடுமையானதால் அச்சகங்கள் இயங்காத நிலையில் 2021, மே 6ஆம் தேதி முதல், ஜூலை 1, 2021 வரை 'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஏழு இதழ்கள் நிறுத்தப்பட வேண்டிய சூழல் உருவானது. 'நிமிர்வோம்' மாத இதழ் கடந்த இரண்டு ஆண்டுகளாக வெளிவராமல் தடைபட்டு நிற்கிறது. இந்த நெருக்கடியான காலகட்டத்திலும் கழகம் தனது இயக்கத்தை இயன்ற அளவு முனைப்புடன் முன்னெடுத்தது. அந்த செய்திகளின் சுருக்கமான தொகுப்பு:**

**ஜனவரி :** யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் முள்ளிவாய்க்காலில் இனப் படுகொலைக்குள்ளான தமிழர்களின் நினைவாக அமைக்கப்பட்டிருந்த நினைவுச் சின்னங்களை சிங்கள இராணுவம் இடித்து தரைமட்ட மாக்கியதைக் கண்டித்து, 2011 ஜன.11இல் திராவிடர் விடுதலைக் கழகம், சென்னை இலங்கை தூதரகத்தை முற்றுகையிட்டு கண்டனத்தைப் பதிவு செய்தது. இது அனைத்துக் கட்சியினரும் பங்கேற்ற போராட்டம்.

கரூரில் முடிதிருத்தும் சமூகத்தைச் சார்ந்த ஹரிகரன், வேறு ஜாதிப் பெண்ணை காதலித்ததால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார். அதைக் கண்டித்து ஜாதி ஆணவக் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மதுரையிலும் (ஜன.12), கரூரிலும் (ஜன.21) திராவிடர் விடுதலைக் கழகம் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.

பெரியாரை, அண்ணா முதன்முதலாக சந்தித்தத் திருப்பூரில் அதன் வரலாற்று நினைவாக பெரியார், அண்ணா சிலைகள் ஒரே பீடத்தில் அமைக்கப்பட்டு உள்ளன. தேர்தலைக் காரணம் காட்டி, அந்த சிலைகளை துணி போட்டு மூடி வைத்தது காவல் துறை. அதை அகற்றக் கோரி காவல்துறையிடம் திருப்பூர் மாவட்டக் கழகம் மனு அளித்தது.

**பிப்ரவரி :** மேட்டூர் தாய்த் தமிழ்ப் பள்ளியில் பிப்.6, 7 தேதிகளில் கழக சார்பில் பெரியாரியல் பயிற்சி முகாம் புதிய இளைஞர்களுக்காக நடத்தப்பட்டது. அரியலூரில் (பிப்.20) கழக சார்பில் ஒரு நாள் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. 'ஊபா' என்ற ஒடுக்குமுறை - ஆள் தூக்கி சட்டத்தை நீக்கக் கோரி சென்னையில் தமிழ்த் தேசிய முன்னணி ஏற்பாடு செய்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழகம் பங்கேற்றது.

**மார்ச் :** மார்ச் 6ஆம் தேதி திருச்சியில் கழகத்தின் செயலவை கூடி, சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. அணியை ஆதரிக்க ஒரு மனதாக முடிவு செய்தது.

ஈழத் தமிழர் இன அழிப்புத் தடுப்பு சர்வதேச மய்யத்தின் சார்பில் இலண்டனில் அம்பிகை செல்வக்குமரன் என்ற பெண், அய்.நா. சபைக்கு 5 முக்கிய கோரிக்கைகளை முன் வைத்து சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார். ஈழத்தில் இனப் படுகொலை செய்து முடித்த இலங்கை அரசு மீது சர்வதேசக் குற்றவியல் நீதிமன்ற விசாரணை நடத்த வேண்டும் என்பது முக்கிய கோரிக்கை. கோரிக்கையை ஆதரித்தும் அம்பிகை அம்மையார் உயிர் காக்கக் கோரியும் சென்னை, ஈரோட்டில் நடந்த கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் (முறையே மார்ச் 12, 13) கழகம் பங்கேற்றது. பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு, ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தது.

பொள்ளாச்சியில் கழக சார்பில் ஒரு நாள் பயிற்சி வகுப்பு நடந்தது (மார்ச் 14). பல்லடத்தில் அன்னை மணியம்மையார் நினைவு கருத்தரங்கு கழக சார்பில் நடத்தப்பட்டது (மார்ச் 25), இஸ்லாமிய அடிப்படை வாதிகளால் படுகொலை செய்யப்பட்ட கோவை கழகத் தோழர் பாரூக், நினைவு நாளில் மத அடிப்படைவாத எதிர்ப்புக் கருத்தரங்கு கழக சார்பில் நடத்தப்பட்டது (மார்ச் 21).

**ஏப்ரல் :** மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமை கட்சி நிறுவனரும் முதுபெரும் பொரியாரிஸ்டுமான வே. ஆனைமுத்து முடிவெய்தினார் (ஏப்.6). முதல் இரங்கல் கூட்டத்தை அடுத்த மூன்று நாட்களிலேயே சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தலைமை நிலையத்தில் படத்திறப்புடன் கழகம் நடத்தியது (ஏப்.10). பொள்ளாச்சி, ஈரோட்டிலும், படத்திறப்பு நிகழ்வுகளை கழகம் நடத்தியது (ஏப்.13).

சென்னையில் மிக முக்கிய நீண்ட சாலையான பெரியார் ஈ.வெ.ரா. நெடுஞ்சாலையின் பெயரை சென்ட்ரல் இரயில் நிலையம் அருகே உள்ள பெயர்ப் பலகையிலிருந்து ஒன்றிய அரசின் நெடுஞ்சாலைத் துறை திடீர் என்று அகற்றி கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் சாலை என்று முன்னறிவிப்பு ஏதுமின்றி மாற்றியது. பிரதமர் மோடி அந்த சாலை வழியே தமிழ்நாட்டில் பயணம் செய்கிறார் என்பதால் இந்தத் திடீர் மாற்றத்தை பார்ப்பனிய அதிகாரவர்க்கம் செய்தது. தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்த நிலையில் சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் நேரே பெயர் மாற்றம் செய்யப்பட்ட பெயர்ப் பலகையின் புதிய பெயரை தார்பூசி அழித்தனர்.

**மே :** சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாயின. தி.மு.க. மாபெரும் வெற்றி பெற்றது. ஒரு பார்ப்பனர்கூட வெற்றி பெற முடியவில்லை. பார்ப்பனரே இல்லாத சட்டமன்றம் தமிழ்நாட்டில் அமைந்தது. மு.க. ஸ்டாலின் முதல்வரானார்.

கழக முன்னணி அமைப்பான தமிழ்நாடு மாணவர் கழகம் மே 16 முதல் 26 வரை இணையம் வழியாக தொடர் கருத்தரங்குகளை நடத்தியது.

(மே 6 முதல் ஜலை 1 வரை 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழ் வெளி வர முடியாமல் தடைபட்டு நின்றுவிட்டது)

**ஜூலை :** கழக தலைமைக் குழுக் கூட்டம் இணைய வழியாகக் கூடியது (ஜூலை 26). பெரியாரியல் பயிற்சி வகுப்புகளை நடத்துவது என தீர்மானித்தது.

தலைமைக் குழு உறுப்பினரும் கழகத்தின் ஆற்றல் மிக்க செயல் வீரருமான மடத்துக்குளம் மோகன், கொரானா பாதிப்புக்குள்ளாகி முடிவெய்தினார் (ஜூலை 1). கழகம் மிகப் பெரும் இழப்பை சந்தித்தது.

ஜாதிப் பாகுபாடு, தீண்டாமை வெறியுடன் தொடர்ந்து செயல்படும் சென்னை அய்.அய்.டி.யைக் கண்டித்து வளாகத்துக்கு அருகே நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழகம் பங்கெடுத்தது. தீண்டாமை எதிர்ப்பு முன்னணி இதற்கு ஏற்பாடு செய்தது.

மாட்டுக் கறி விற்பனைக்கு தடை போட்ட அவிநாசி வட்டாட்சியரைக் கண்டித்து, அவிநாசியில் கழகம் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது (ஜூலை, 26).

தமிழ்ப் புலி கட்சிப் பொறுப்பாளர் கம்பம் திருநாவுக்கரசு, போதைப் பொருள் விற்பனை செய்யும் கும்பலால் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து குற்றவாளிகளைக் கைது செய்யக் கோரி தூத்துக்குடியில் நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழகம் பங்கேற்றது (ஜூலை 21).

நீட் தேர்வு பாதிப்பு குறித்து தி.மு.க. ஆட்சி நியமித்த ஏ.கே. ராஜன் குழு நியமனத்தை இரத்து செய்யக் கோரி, தமிழக பா.ஜ.க. சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் திராவிடர் விடுதலைக் கழகம் எதிர் மனுதாரராக தன்னையும் இணைத்துக் கொண்டது (ஜூலை 9).

பீம் கொரேகான் வழக்கில் பல மாதங்களுக்குப் பிறகு முறைகேடாக ஒன்றிய அரசால் சேர்க்கப்பட்ட பழங்குடி மக்களின் உரிமைப் போராளி 80 வயதைத் தாண்டிய ஸ்டேன் சுவாமி சிறையிலிருந்தபடியே மரணமடைந்தார். அதைக் கண்டித்தும் 'ஊபா' சட்டத்தை இரத்து செய்யக் கோரியும் சென்னையில் நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழகம் பங்கேற்றது.

காமராசர் பிறந்த நாள் கருத்தரங்கத்தை இணையம் வழியாக தமிழ்நாடு மாணவர் கழகம் நடத்தியது (ஜூலை 18). ஜாதி ஆணவப் படுகொலைகளைத் தடுக்க தனிச் சட்டம் இயற்றக் கோரி தமிழ்நாடு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் அவர்களை சென்னை தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து கழக சார்பில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

**ஆகஸ்டு :** தி.மு.க. ஆட்சி அமைந்த 100ஆவது நாளில் சென்னை மயிலாப்பூரில் அனைத்து ஜாதியைச் சார்ந்த 24 பேரை அர்ச்சகராக்கும் பணி நியமன ஆணையை முதல்வர் வழங்கி, பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றினார்.

சேலம் பெரியார் பல்கலைக்கழகம், ஆர்.எஸ்.எஸ். தலைமையகம் போல செயல்படுவதைக் கண்டித்து, பல்கலைக்கழக வளாகம் அருகே கழக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது (ஆக.23). திராவிடர் விடுதலைக் கழகம் தொடங்கப்பட்ட ஆக. 12ஆம் நாளையொட்டி இணைய வழி கருத்தரங்கம் கழக சார்பில் நடத்தப்பட்டது (ஆக.12, 2021).

**செப்டம்பர் :** செப்டம்பர் முதல் தேதி முதல் 16ஆம் தேதி வரை கழக முன்னணி அமைப்புகளான தமிழ்நாடு அறிவியல் மன்றம் மற்றும் இணைய தள பிரிவு இணைந்து இணையம் வழியாக பெரியாரி யலைப் பரப்பும் நூல்கள் சிந்தனைகளை முன் வைத்து தொடர் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

பெரியார் பிறந்த நாளான செப்.17ஆம் தேதி, 'சமூக நீதி' நாளாக அரசு சார்பில் அனைத்து அலுவலகங் களிலும் கொண்டாடப்படும் என்ற வரலாற்று சிறப்பு மிக்க அறிவிப்பை சட்டமன்றத்தில் முதலமைச்சர் அறிவித்தார் (செப்.6).

சேலம் காவலாண்டியூர் கழகத் தோழர்களிடம் ஜாதி மறுப்பு திருமணம் செய்து கொண்ட இளமதி-செல்வன் இணையர் பாதுகாப்பு தேடி வந்தபோது மணமகள் வீட்டைச் சார்ந்தவர்களும் பா.ம.க. வினரும் கழகத் தோழர்களைத் தாக்கி, மணமகளை மீட்டுச் சென்றனர். கழக முயற்சியால் ஜாதி வெறியர் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டம் போடப் பட்டது. சில மாதங்களுக்குப் பிறகு, மணமகள் காவல்நிலையம் வந்து தான் கடத்தப்பட்டதைக் கூறினார். மாவட்டக் காவல்துறை அதிகாரி முழு ஒத்துழைப்புடன் இணையர்கள் மீண்டும் இணைந்தனர். கழகத் தோழர்கள் மணமக்களை மேட்டூர் வீதிகளில் ஊர்வலமாக அழைத்து வந்து பாராட்டு விழா பொதுக் கூட்டத்தையும் நடத்தினர். கொரனா ஊரடங்குக்குப் பிறகு நீண்டகால இடைவெளியில் மேட்டூரில் நடந்த முதல் பொதுக் கூட்டமும் இதுவே (செப். 23).

ஈரோடு தெற்கு மாவட்ட கழகத் தோழர்கள் குடும்பங்களைத் தேடிச் சென்று சந்தித்து உரை யாடும் குடும்ப சந்திப்புகளை நடத்தினர் (செப். 29).

**நவம்பர் :** தலைமைக் கழகம் சார்பில் கழகப் பொறுப்பாளர்கள் மாவட்டம் தோறும் சென்று மூன்று கட்டப் பயணமாக கழகத் தோழர்களுடன் கலந்துரையாடல் நடத்தி, கழக ஏடான 'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஏட்டுக்கு உறுப்பினர் சேர்த்தல் மற்றும் கழகத்தின் எதிர்காலச் செயல்பாடுகள் குறித்த கருத்துகளைக் கேட்டனர். மதுரை, காரைக்குடி, பேராவூரணி, மயிலாடுதுறை, கருவேப்பிலங்குறிச்சி,

(4ஆம் பக்கம்)

தலையங்கம்

# இது ஆரிய தேசமா?

‘அய்.அய்.டி.’ உயர்கல்வி நிறுவனங்கள் ‘ஆரியப் பெருமை’களைப் பறைசாற்றும் அமைப்புகளாக வெளிப்படையாகவே செயல்பட்டு வருகின்றன. மக்கள் வரிப் பணத்தில் பெரும் பகுதியை விழுங்கிக் கொண்டிருக்கும் இந்த நிறுவனங்களின் நோக்கமே இது தானா? ‘ஆரியர் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள்’ என்றும், சமஸ்கிருதத்தில் பொதிந்து கிடக்கும் இரகசியங்களை வெளிக் கொணர வேண்டும் என்றும், இந்திய சிந்தனையின் அடிப்படையிலான அறிவுக் கட்டமைப்பை மீண்டும் புதுப்பித்துப் பரப்ப வேண்டும் என்றும், கோரக்பூர்அய்.அய்.டி. நிறுவனம் ‘காலண்டர்’ வழியாக ஆரியக் கொள்கைப் பரப்புரையில் இறங்கியிருக்கிறது. கோரக்பூர் அய்.அய்.டி. இயக்குனர் - ஒன்றிய நிதியமைச்சரின் முதன்மை ஆலோசகர், இந்திய தொழில்நுட்பக் கல்வி கழகத் தலைவர் இணைந்து அந்தக் காலண்டரை உருவாக்கியிருக்கிறார்களாம்.

ஆதாரங்களாக இதில் முன் வைக்கப்பட்டுள்ள கருத்துகள் ‘தரம் தாழ்ந்த சிந்தனைகள்’ என்று பல ஆய்வாளர்கள் மானுடவியலாளர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

“ஆரியர்கள் தான். பாரத தேசத்தின் பூர்வீகக் குடிகள், அவர்களுக்கு தொடக்கம் என்ற ஒன்றே கிடையாது. ஆரியர்களைத் தவிர மற்றவர்கள் மிலேச்சர்கள்” என்பதுதான். ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு தத்துவத்தை உருவாக்கிய கோல்வாக்கரின் கருத்து. ‘இந்திய’ நாகரிக வரலாற்றின் அடிப்படை வேதப் பண்பாடு அல்ல; திராவிட நாகரிகமே என்று முதன் முதலாக 1922இல் சர். ஜான் மார்ஷல் தலைமையிலும் வழிகாட்டுதலிலும் நடைபெற்ற அகழ்வாய்வு குழு தான் ஹரப்பா, மொகஞ்சாதாரோ உள்ளிட்ட பகுதிகளில் அகழ்வாராய்ச்சி செய்து அறிவித்தது. அதற்கு முன்பு - “இந்தியாவின்” தொன்மையான பண்பாடு குறித்த எந்த விவாதமும் ஆய்வும் நடைபெற்றதில்லை.

மொழியின் அடிப்படையில் ஆய்வு செய்த அஸ்கோ பார்பொலா எனும் பின்லாந்துக்காரர் சிந்துவெளியில் பயன்படுத்தப்பட்ட எழுத்து முத்திரைகளை ஆய்வு செய்தார். ‘சிந்துவெளி எழுத்தை கட்டுடைத்தல்’ எனும் ஆய்வு நூலை எழுதினார். உரிய ஆதாரங்களோடு ‘இந்திய’ நாகரிகம் - திராவிட நாகரிகமே; அவர்கள் பேசிய மொழி திராவிடம் என்பதை நிலை நாட்டினார். 2010இல் கோவையில் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் பங்கேற்று இதே கருதத்தை ஆய்வுரையாக முன் வைத்தார். அந்த மாநாட்டில் இந்த அமர்வுக்குத் தலைமை தாங்கியவர் தொல்லியல் ஆய்வாளர் அய்ராவதம் மகாதேவன். அவரும் இதே கருத்தைக் கொண்டவர். 1977லேயே மொழி எழுத்தியல் அடிப்படையில் ஆய்வு செய்த ‘சிந்துவெளி எழுத்து’ எனும் நூலை எழுதியதோடு 40க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் முன் வைத்தார் அய்ராவதம் மகாதேவன். சிந்துவெளி நாகரிகத்தோடு தென்னாட்டு திராவிட நாகரிகம் இணைந்து நிற்கும் புள்ளிகளையும் அவர் அடையாளப்படுத்தினார். திராவிட நாகரிகத் தொட்டிலான சிந்துவெளியில் ஒரு மனிதன் காளைகளின் கொம்பைப் பிடித்து அடக்கும் முத்திரைகள் இடம் பெற்றிருப்பதை அவர் எடுத்துக் காட்டினார்.

தொல்லியல், மொழி, எழுத்து அடிப்படையில் ‘இந்திய’ நாகரிகம், திராவிட நாகரிகமே என்று உறுதிப்படுத்திய நிலையில் இறுதியாக வந்த ‘மரபணு’ ஆய்வு இதை மேலும் உறுதிப்படுத்தியது. ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த மரபணு ஆய்வாளர் டேவிட் ரெய்ச்சி 2018 மார்ச் மாதம் வெளியிட்ட ஆய்வின் முடிவுகளுக்கு இதுவரை எந்த மறுப்பும் வரவில்லை. உலகின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த பல்வேறு துறைகளைச் சார்ந்த 92 அறிஞர்கள் இந்த ஆய்வில் பங்கேற்றனர். சமஸ்கிருதத்தின் தொன்மை வடிவத்தோடு குதிரைகளோடு இங்கே குடிபெயர்ந்து வந்தவர்கள் தான் ஆரியர்கள் என்ற ஆய்வு உறுதிப்படுத்தியது. ‘மரபணு’ வழியாக இது நிரூபிக்கப்பட்டது. அண்மைக்காலம் வரை தாய் வழியாக மகளிடம் கடத்தப்படும் உயிர் அணுக்கள் அடிப்படையிலேயே ஆய்வுகள் நடந்தன. இந்த ஆய்வுகள் ஒரு செய்தியை மட்டும் உரத்துக் கூறிக் கொண்டிருந்தன. 12,500 ஆண்டுகளாக, வெளியிலிருந்து எந்த மரபுஅணு சேர்க்கையும் நடைபெற வில்லை என்பதே அந்த செய்தி. இப்போது நடந்துள்ள புதிய ஆய்வுகள் ‘இந்தியா’வின் ஆண்கள் வழி பரம்பரை மரபு அணுக்களை சோதனைக்கு உட்படுத்தின. அப்போது தான் குட்டு உடைந்தது. ஆண் மரபு அணுக்களில் வெளியிலிருந்து வந்த மரபு அணுக்கள் கலந்து விட்டன என்று கண்டறியப்பட்டு விட்டது. இந்த உண்மை ஆரியர்களே இம்மண்ணின் மக்கள். அவர்கள் குடியேறியவர்கள் அல்ல என்ற வாதத்தை தகர்த்து எறிந்து விட்டன.

ஆரியர்கள் ஊடுறுவியவர்கள் என்ற உண்மையை பார்ப்பனப் பண்டிதரும் முன்னாள் குடியரசுத் தலைவருமான டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணனே இவ்வாறு கூறுகிறார். “இந்தியாவின் அன்றைய பூர்வீகக் குடிகளுக்கும் ஆரியர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலையும் **ஆரியப் பண்பாட்டின் ஊடுறுவலையும்** இராமாயணம் பேசுகிறது.”

- ஆரியர்கள் வந்தேறிகள் என்பதற்கு இப்படி ஏராளமாகப் பட்டியலிட முடியும். நாம் குருதி அடிப்படையில் ‘இனவாதம்’ பேசுகிறவர்கள்கள் அல்ல; ஆரிய - திராவிட இரத்தக் கலப்பு ஏற்பட்டிருப்பது உண்மை என்று கூறும் பெரியார் இதற்குப் பிறகு ஏன் பண்பாட்டுக் கலப்பை மறுக்கிறார்கள். தாங்களே உயர் பிறவிக்காரர்கள் என்று கூறிக் கொண்டு பெரும்பான்மை மக்களை ‘சூத்திரர்’கள் என்று இழிவுபடுத்தி அவர்களின் சுயமரியாதையை வாழ்வுரிமையை மறுக்கிறார்கள்? இது தான் பெரியாரும் பெரியார் இயக்கமும் இன்றைக்கும் கேட்கும் கேள்வி!

இப்போதும் ஆரியர்களே இந்நாட்டின் பூர்வீகக் குடிகள் என்று அறிவுத் துறையில் உயர்ந்தவர்களாக கருதிக் கொள்ளும் பார்ப்பனர்களே ஏன் ஆணவத்தோடு பிறவிப் பெருமை பேச வேண்டும்? - இது ஆரிய நாடு என்று நிலைநாட்டத் துடிப்பது ஏன்? இதை எதிர்ப்பவர்களை மனித சமத்துவத் துக்காகப் போராடுகிறவர்களை ‘பிராமண துவேஷிகள்’, ‘வேத துவேஷிகள்’, ‘இந்து வெறுப்பாளர்கள்’ என்று தூற்றுகிறார்கள்.

இதுதான் ஆரிய நீதியா?

இனவெறி பேசும் இந்தக் காலண்டரை தீயிட்டுப் பொசுக்க வேண்டாமா?

# பெரியார் பெரும் தொண்டர் வே.ஆனைமுத்து படத்திறப்பு -நினைவலைகள் வெளியீடு




பெரியாரிய பெரும் தொண்டர், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடமைக் கட்சி நிறுவனர் வே.ஆனைமுத்து நினைவலைகள் வெளியீடு, படத்திறப்பு, கருத்தரங்கம், 02.01.2021 அன்று சென்னை நிருபர் சங்கத்தில் மாலை 3:30 மணியளவில் நடைபெற்றது. நிகழ்விற்கு, மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடமைக் கட்சி துணைப் பொதுச் செயலாளர் வாலாசா வல்லவன் தலைமை வகித்தார்.

முதல் நிகழ்வாக, வே. ஆனைமுத்து உருவப் படத்தை, முன்னாள் திட்டக்குழு துணைத் தலைவர் மு.நாகநாதன் திறந்து வைத்து வே. ஆனைமுத்து அவர்களுடனான நினைவுகளை பகிர்ந்து கொண்டார். பின், நாடாளுமன்ற உறுப்பினர், திமுக துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா நினைவு மலர் வெளியிட, திமுக துணைப் பொதுச் செயலாளர் சுப்புலட்சுமி ஜெகதீசன் பெற்றுக்கொண்டார். மலரை வெளியிட்டு உரையாற்றிய ஆ.இராசா, ‘காவியை வீழ்த்த அனைத்து கருப்புச் சட்டைகளும் ஒன்றிணைந்து நிற்க வேண்டும்’ என்று உரையாற்றினார்.

இரண்டாவது அமர்வில், வே.ஆனைமுத்துவின் நினைவேந்தல் கருத்தரங்கம் நடைபெற்றது. நிகழ்விற்கு, மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி பொதுச் செயலாளர் துரை சித்தார்த்தன் தலைமை வகித்தார். துணைப் பொதுச் செயலாளர் இரா.திருநாவுக்கரசு வரவேற்புக் கூறினார். தொடர்ந்து, ‘தோழர் வே. ஆனைமுத்துவின் குறி இலக்கான கூட்டாட்சி அமைய...’ என்ற தலைப்பில் தன்னாட்சி தமிழகத்தைச் சேர்ந்த ஆழி செந்தில்நாதன் உரையாற்றினார். இறுதியாக, ‘வகுப்புரிமை போராட்டத்தில் தோழர் வே.ஆனைமுத்து...’ என்ற தலைப்பில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார். நிகழ்விற்கு தமிழ்க்களம் இளவரசன் நன்றி கூறினார்.

# பெரியார் சாக்ரடீஸ் தந்தை நினைவு நாளில் கழக ஏட்டுக்கு நன்கொடை


விழுப்புரம் மாவட்ட செயலாளர் பெரியார் சாக்ரடீஸ் தந்தை கோவிந்தசாமி முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு 30.12.2021 அன்று, செஞ்சி அத்தியந்தல் சாக்ரடீஸ் இல்லத்தில் மாலை 5 மணியளவில் நடைபெற்றது. பெரியார் சாக்ரடீஸ் தனது தந்தையின் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டு நிகழ்விற்கு வரவேற்புரை யாற்றினார். நிகழ்விற்கு கழகத்தின் தலைமைக் குழு உறுப்பினர் ந. அய்யனார் தலைமை வகித்தார். அம்பேத்கர் மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் சு. மழைமேணி பாண்டியன் படத்தை திறந்து வைத்தார்.

நிகழ்வில், திமுக ஒன்றிய செயலாளர் கலா நாராயணமூர்த்தி, பகுத்தறிவு பாடகர் காத்தவராயன், பெரியார் சிந்தனையாளர் நா. இராசநாயகம், திராவிடர் விடுதலைக் கழக விழுப்புரம் மாவட்டத் தலைவர் பூ.அ இளையரசன், மருத்துவர் தன்மானம் ஆகியோரின் நினைவேந்தல் உரையைத் தொடர்ந்து, கழகத்தின் தலைமைக் குழு உறுப்பினர் விழுப்புரம் ந.அய்யனார் நிறைவுரையாற்றினார். கழகத் தோழர் பரிமளா நன்றி கூறினார்.

நினைவேந்தலில், பெரியார் முழக்க வளர்ச்சி நிதியாக, பெரியார் சாக்ரடீஸ் ரூ. 1000/-, அம்பேத்கர் மக்கள் கட்சி நிறுவனர் சு. மழைமேணிப் பாண்டியன் ரூ.500/-, திமுக ஒன்றிய கவுன்சிலர் கலா நாராயணமூர்த்தி ரூ.500/-யை தலைமைக்குழு உறுப்பினர் அய்யனாரிடம் வழங்கினர்.

நிகழ்வில், மறைந்த கோவிந்தசாமி திமுகவைச் சார்ந்தவராக இருந்தாலும், தீவிர பெரியார் பற்றாளர், சுயமரியாதை திருமணம் செய்து கொண்டவர், இறுதிவரை சடங்குகளை பின்பற்றாதவர் என்றும் அவரது நினைவுகள் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

## வளர்ச்சி நோக்கி மனிதப் பற்று



எனக்கு வளர்ச்சியே முக்கியம். எனக்கு வேறு எந்த அபிமானமும் கிடையாது. இந்த விசியத்தில் மானாபிமானமும் கிடையாது. மானாபிமானனான குடும்ப வாழ்க்கைக்காரனுக்கு அதாவது தனது சுயநலனுக்குத்தான் அது தேவை. மானம் போனால் எப்படி பிழைக்கிறது என்பவனுக்குத்தான் அது தேவை.

எனக்கு, நான் பிழைக்க வேண்டுமே, என் வாழ்வு வளம்பெற வேண்டுமே, மக்களிடையில் எனக்கு மதிப்பு வேண்டுமே, என் அந்தஸ்து, எனது நிலை, எனது போக்கு வளம்பெற வேண்டுமே, என்னைப் பலர் மதிக்க வேண்டுமே, எனக்குப் பலரின் ஆதரவு வேண்டுமே என்பன போன்ற - என், எனக்கு என்கின்ற கவலையுள்ளவனுக்குத்தான் மானாபிமானம், அது போலவே தேசாபிமானம், மொழி அபிமானம், இலக்கிய அபிமானம், சமய அபிமானம், முதலிய அபிமானங்கள் வேண்டும். எனக்கு வெறும் மனிதாபிமானந்தான் ; அதிலும் வளர்ச்சி அபிமானந்தான் முக்கியம்.

**‘விடுதலை’** 15.10.1962

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேச்சு

# வரலாற்றுப் பதிவுகளை நினைவூட்டும் கழக ஏட்டின் தலையங்கங்கள்

*‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஏட்டின் தலையங்கங்கள் வரலாற்று ரீதியான பதிவுகளையும் கழக நிலைப்பாடுகளையும் நினைவூட்டுகின்றன என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி கூறினார்.*

டிசம். 24, 2021 அன்று சென்னையில் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ தலையங்கத் தொகுப்பு வெளியீட்டு நிகழ்வுக்கு தலைமையேற்று, கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார். அவர் உரையில் குறிப்பிட்டதாவது:



திராவிடர் கழகத்திலிருந்து வெளியேறியவர்கள், வெளியேற்றப்பட்டவர்கள் அனைவரும் இணைந்து, தந்தை பெரியார் திராவிடர் கழகம் கட்டியமைக்கப் பட்டது. அப்போது, ‘பெரியார் காலத்து தமிழ் நாட்டை உருவாக்குவோம்’ என்பதைத் தான் இலட்சியமாக வைத்து தொடங்கினோம். பகுத்தறிவை முதன்மையாகக் கொள்ளாமல், ஜாதி ஒழிப்பை முதன்மையாகக் கொண்டு, கலந்து பேசி இந்த இயக்கத்தைத் தொடங்கினோம். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னுரையில் குறிப்பிட்டிருந்தார், பெரியாரின் சுயமரியாதை இயக்க காலத்து சிக்கல்கள் வேறு, தற்போது சமுதாயத்தில் நிலவும் சிக்கல்கள் வேறு’ என்று அதுபோல பெரியார் காலத்தில் மரண தண்டனை சிக்கல்கள் இல்லை. சுற்றுச் சூழல் கேட்டை பற்றியோ, அனு உலைகளைப் பற்றியோ அப்போது விவாதங்கள் நடைபெறவில்லை. மாற்றுத் திறனாளிகள் பற்றிய எந்த விவாதமும் அந்த காலத்தில் இல்லை. திருநங்கைகளைப் பற்றிய கருத்துக்கள் விவாதிக்கப்படவில்லை. இவையெல்லாம் பெரியார் காலத்திற்குப் பிறகு தான் நாம் விவாதிக்கிறோம். பெரியாரின் பார்வையை வைத்துத் தான் நாம் ஒவ்வொரு சிக்கல்களிலும் முடிவுகளை எடுக்கிறோம். காய்தல், உவத்தல் இல்லாமல் பேச வேண்டும். எந்த கூட்டணியிலும் இல்லாத நாம் தான் சமூகப் பிரச்சனைகளுக்கு வெளிப்படையாக குரல் கொடுக்க முடியும். அந்த வகையில் தான், நமது பார்வையை இந்தத் தலையங்கங்கள் கூர்மையாக வெளிப்படுத்தியிருக்கின்றன.

தலையங்கங்களைத் திருப்பிப் பார்க்கின்ற போது தான், பல நிகழ்வுகள் எனது நினைவுக்கு வருகின்றன. நமது மனக்கண்ணை விட்டு பல நிகழ்வுகள் அகன்று விடுகின்றன. தந்தை பெரியார் திராவிடர் கழகமாக இயங்கலாம் என்று முடிவெடுத்து தொடக்க விழா மாநாடு நடப்பதற்கு முன்னதாகவே பல போராட்டங்களை சந்திக்க வேண்டியவர்களாக இருந்தோம். மதுரை பல்கலைக் கழகத்தில் ’ஜோதிட கல்வி’ யை பாடமாக்கியபோது அதற்கு எதிராக போராட்டம். ‘டர்பன்’இல் இனப் பாகுபாடு மாநாட்டில் தோழர் விடுதலை இராசேந்திரன் பங்கெடுத்து வந்தார். அதில் ‘இனப் பாகுபாட்டைப் போல், ஜாதியப் பாகுபாட்டையும் கருத்தில் கொள்ள வேண்டும்’ என்று நமது கருத்தை பதிவு செய்துவிட்டு வந்தார். அதை ஒன்றிய அரசு ஏற்றுக் கொள்ள வில்லை. கடுமையாக எதிர்த்தது. பா.ஜ.க.வைச் சேர்ந்த தருண் விஜயைப் பற்றி நினைவு கூற வேண்டும். திருக்குறளை பரப்பப் போகிறேன் என்று கிளம்பினார். திராவிடர் கழகத் தலைவர் வீரமணி கூறுவார், ‘பெரியாரைப் பற்றி பேசமாட்டார்களா என்ற காலம் போய், அய்யோ இவர்களெல்லாம் பெரியாரை பேசுகிறார்களே’ என்று கூறுவார். அதுபோல திருக்குறளை பரப்புகிறேன் என்று தருண் விஜய் கூறிய போதே இவர்களின் நோக்கம் வேறானது என்று நாம் பதிவு செய்தோம். அது போலவே நடந்தது. இதே தருண் விஜய், “எங்களுக்கு இனப் பாகுபாடு எல்லாம் கிடையாது, கருப்பர்களான தென்னிந்தியர்களிடம் நாங்கள் சமமாகத் தானே பழகுகிறோம்” என்றார். டர்பன் மாநாட்டில் கூறினோம், இனப்பாகுபாடோடு, ஜாதிய பாகுபாட்டையும் கணக்கில் கொள்ள வேண்டும் என்று ஆனால் இவர்கள் திராவிட இனத்தையே கருப்பர்களாக பார்க்கிறார்கள். தனித் தனி காலகட்டத்தில் நடக்கிற செய்திகளை இணைத்து பார்த்தால் வியப்பாக இருக்கிறது.

அதே போல இந்து அறநிலையத்துறை சார்பில், அதிகாரிகளாக வருவதற்கு ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிப்பு வெளி வந்தது. அதற்கு எதிராக வழக்கு தொடுத்தோம், ஆனால் வழக்கு வருவதற்கு முன்பே கருத்தை மாற்றிக் கொண்டு இருபாலரும் விண்ணப்பிக்கலாம் என்று அறிவித்தார்கள். அந்த காலகட்டத்தில் தான் 22 அதிகாரிகளாக அறநிலையத்துறையில் பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவை கூட நினைவில் இருந்து மறைந்துவிட்டது. இந்தத் தலையங்கங்களை பார்க்கிற போது மீண்டும் நினைவிற்கு வருகிறது. நாம் குலக்கல்வியை எதிர்த்தோம். இப்போதைய திடீர் தமிழ் தேசியவாதிகளுக்கு வழிகாட்டி ம.பொ.சி மட்டுமே, மாபொசியின் கட்சி மட்டுமே, குலக் கல்வியை ஆதரித்தது. தலைமைக் குழுவில் வரவேற்று தீர்மானம் இயற்றினர். தமிழ்நாடு முழுவதும் ஆதரித்துப் பிரச்சாரமும் செய்தனர். அதே போன்று ஒரு குலக்கல்வித் திட்டம் இப்போது வந்திருக்கிறது. 1986 ஆம் ஆண்டு குழந்தைத் தொழிலாளர் தடை சட்டத்தில் ஒரு திருத்தத்தை இந்த பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த உடனேயே கொண்டு வந்தார்கள். அது என்ன திருத்தமென்றால், குழந்தைகள் (14 வயதிற்குட்பட்டவர்கள் ) பள்ளி நேரம் போக ஆபத்தில்லாத தங்களது குடும்ப தொழில்களில் ஈடுபடலாம் என்பது தான் அந்த திருத்தம். அவர்கள் குலக்கல்வி என்றார்கள், இவர்கள் குடும்பத் தொழில் (Family Enterprises) என்கிறார்கள். இரண்டும் ஒரே பொருளைக் கொண்டது தான். அந்தத் திருத்தம் தேசிய கல்விக் கொள்கை வரை கொண்டு வரப்பட்டுள்ளது. அதை சுட்டிக் காட்டி ஒரு தலையங்கம் எழுதப்பட்டுள்ளது.

தேசத் துரோகம் சட்டம் பற்றி தற்போது விரிவாக விவாதிக்கப்படுகிறது. தேசத் துரோகம் பற்றி ஒரு தலையங்கம் எழுதப்பட்டுள்ளது. தற்போது தேசத் துரோக சட்டத்திற்கு ஆதாரமாக ’பிரிவியூ கவுன்சில்’ கொடுத்த தீர்ப்புகளை எடுத்து காட்டுகிறார்கள். பிரிவியூ கவுன்சில் தான் பல பிற்போக்கான தீர்ப்பு களைக் கொடுத்துள்ளது. அதில் சொல்லப்பட்ட ‘பழக்க, வழக்கம்’ என்ற சொல்லைத் தான் இன்று வரை பேசிக் கொண்டிருக்கிறார்கள். அந்த சொல்லை சட்டத்தில் இணைத்துவிட்டார்கள். தற்போது அதை வைத்து தான் அர்ச்சகர் சட்டத்தை எதிர்க்கிறார்கள். நீதிமன்றத்திற்கு சென்று அந்த சொல்லை மட்டுமே வைத்துக் கொண்டு வழக்காடுகிறார்கள். மார்கண்டேய கட்ஜூ ஒரு தீர்ப்பை கொடுக்கிறார். பிரிவியூ கவுன்சில் கொடுத்த தீர்ப்பை ஏற்க முடியாது என்றே ஒரு தீர்ப்பை கொடுக்கிறார். அந்தக் காலத்தில் அந்நியர்கள் ஆண்டார்கள், காலனி ஆட்சி இருந்தது அப்போது கூறியிருக்கிறார்கள். அந்த விளக்கத்தை இப்போது பொருத்திப் பார்க்க முடியாது என்றார். தேசத் துரோக வழக்கு விநாயக் சென் மீது போட் டார்கள். மாவோ புத்தகங்களை வைத்திருந்தார் என்பதற்காக வழக்கு போட்டார்கள். அப்போது சேலத்தில் அத்வானி கலந்து கொண்ட மாநாடு நடந்தது. அதை எதிர்த்தோம். அதைப் பற்றிய விரிவான தலையங்கம் எழுதப்பட்டுள்ளது. இப்போது தான் உச்ச நீதி மன்றம் அதைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறது. இப்படி ஏராளமான தலையங்கங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

கும்பகோணம் பள்ளி தீ விபத்து பற்றி நமக்கு தெரியும். முதல் தளத்தில் கூரை, அதில் வகுப்புகள் நடந்தன. கீழே இறங்குவதற்கு குறுகிய வழி, அந்த வழியும் பூட்டி வைக்கப்பட்டிருந்தது அதனால் குழந்தைகள் வெளியேற முடியாத நிலை. இறந்து போனார்கள். உடனே அதிகாரிகள் ஒரு அறிவிப்பை வெளியிட்டார்கள் கூரைகளே இருக்கக் கூடாது என்று, ஏன்? தரைத்தளத்தில் வெளியேறும் அளவிற்கு வாய்ப்பு இருந்திருந்தால் விபத்து நடந்திருக்காதே. பூட்டி வைத்தது தானே சிக்கல். இதில் ஒரு சிக்கல் வந்தது. என்னவென்றால், சிறு சிறு நன்கொடை பெற்று நடத்தி வந்த தாய்த்தமிழ் பள்ளிகளெல்லாம் மூட வேண்டிய சிக்கல் வந்தது. ஏனென்றால் பெரும்பாலும் தாய்த்தமிழ் பள்ளிகளெல்லாம் கூரையில் தான் நடந்து கொண்டிருந்தது. அப்போது, “ ‘தாய்’ இல்லாமல் தவிக்கும் தாய்த் தமிழ் பள்ளி” என்று ஒரு தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது. கும்பகோணம் பிரச்சனையை ஒட்டி எழுதப்பட்டது. அப்போது தொடக்கக் கல்வி அரசு மட்டுமே நடத்த வேண்டும் என்று தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் முழக்கத்தை வைத்தோம். அரசே கல்வி முழுவதும் கொடுக்க வேண்டும் என்பது கோரிக்கையாக இருந்தாலும் குறைந்த பட்சம் தொடக்கக் கல்வியை தாய்மொழியில் கொடுக்க வேண்டும் என்பதே நமது கோரிக்கையாக இருந்தது. அதைப் பற்றி தலையங்கத்தில் விவாதித்துள்ளோம். ஜாதிய சிக்கல்களைப் பற்றி ஏராளமான தலையங்கங்கள் வந்துள்ளன.

அதேபோல கேரளா சட்டமன்றத்தில் கொண்டு வந்த சட்டங்களை வரவேற்று தலையங்கங்கள் எழுதப்பட்டுள்ளன. தேவசம் போர்டில் 2003 இல் பட்டியலினத்தவரை அர்ச்சகர் பணியில் அமர்த்தியதை எதிர்த்து ஒரு வழக்கு போடப் படுகிறது. ’ஆதித்யன்’ என்ற புகழ்பெற்ற வழக்கு அது. அந்த வழக்கில் அவர்களை நியமித்தது செல்லும் என்று உச்ச நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது. அப்படி தீர்ப்பு வரக் காரணம், தமிழ்நாட்டைச் சார்ந்த நீதிபதி துரைசாமி இராஜூ அவர்களும், கர்நாடகத்தை சேர்ந்த நீதிபதியும், பகுத்தறிவுவாதியும், தமிழ்நாட்டில் கல்வி பெற்றவருமான இராஜேந்திர பாபு இருவரும் தான் அந்தத் தீர்ப்பைக் கொடுத்தார்கள். அரசியல் சட்டத்திற்கு மேல் எதுவும் கிடையாது. அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்பு அது தான் உயர்ந்தது. அதைத் தாண்டி எந்தப் பெயரில் பாகுபாடு இருந்தாலும் ஏற்றுக் கொள்ள முடியாது. அந்த நியமனம் செல்லும். இதைப் பற்றியும் நமது தலையங்கம் விவாதித்துள்ளது.

தென்னாட்டு நீதிபதிகள் ஒரு தீர்ப்பை வழங்கு கிறார்கள். அதே சட்டத்தை வைத்து வடநாட்டு நீதிபதிகள் வேறொரு தீர்ப்பை வழங்குகிறார்கள். திராவிடர் கழகமாக பெயர் சூட்டிய மாநாட்டில் பெரியார் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார், ‘உச்ச நீதிமன்றம் என்ற ஒன்று இருக்கவே கூடாது. அந்த மாநிலத்தின் உயர்நீதிமன்றம் தான் உச்ச நீதிமன்றம்’ என்று 1944இல் தீர்மானத்தை கொண்டு வந்தார். காரணம் அங்கே இருப்பவர்களுக்கு இங்கே இருக்கும் சிக்கல் பற்றி தெரியாது, புரியாது. கேரளத்தில், ஓணம் பண்டிகைக்கு இந்து மதக் கதை இருந்தாலும்கூட, தமிழ்நாட்டில் பொங்கலைப் போல, அனைத்து மதத்தினரும் கொண்டாடு கிறார்கள். அது ஒரு வித்தியாசமான கதை. நம் ஊர்களில் தேவர்கள் அசுரர்களைக் கொன்றதைத் தான் விழாவாக கொண்டாடுகிறோம். அல்லது வெள்ளையர்கள் கருப்பர்களைக் கொன்றதைத்தான் விழாவாக கொண்டாடுகிறோம். ஏறத்தாழ அனைத்து விழாக்களும் அப்படித்தான் உள்ளன. கேரளத்தில், வெள்ளை நிறத்தவர்களால் கொல்லப்பட்ட கருப்பு

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# நங்கவள்ளியில் கலை நிகழ்வுகளுடன் பெரியார் நினைவு நாள் பொதுக் கூட்டம்




நங்கவள்ளி நகரம் சார்பாக, 26.12.2021 ஞாயிறு மாலை 6 மணிக்கு தந்தை பெரியார் 48ஆவது நினைவு நாள் பொதுக்கூட்டம் நங்கவள்ளி பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது. கூட்டம் நங்கவள்ளி ஒன்றிய பொறுப்பாளர் கிருஷ்ணன் தலைமையில் தொடங்கியது. கூட்டத்தின் முதல் நிகழ்வாக மேட்டூர் டி.கே.ஆர் பகுத்தறிவு இசைக்குழுவின் இசை நிகழ்ச்சியும், அதனைத் தொடர்ந்து ஆனந்த் குழுவினருடன் வீதி நாடகமும் நடைபெற்றது.

நங்கவள்ளி திராவிடர் விடுதலைக் கழகச் செயலாளர் பிரபாகரன் வரவேற்புரை நிகழ்த்தினார். கூட்டத்தில், சேலம் மாவட்ட அமைப்பாளர் நங்கவல்லி அன்பு, ஒன்றிய பொறுப்பாளர் ராஜேந்திரன், CPI நங்கவள்ளி ஒன்றிய செயலாளர் கிருஷ்ணன், மனிதநேய மக்கள் கட்சியின் மேற்கு மாவட்டத் தலைவர் முகம்மது ரயீஸ், பகுஜன் சமாஜ் கட்சியின் மாவட்டத் தலைவர் பார்த்திபன் உரையாற்றினார்கள். இறுதியாக திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை நிகழ்த்தினார். இறுதியாக கண்ணன் நன்றி கூற கூட்டம் நிறைவுற்றது.

கூட்டத்திற்கு மேட்டூர், மேட்டூர் RS, கொளத்தூர், காவலாண்டியூர், சேலம், இளம்பிள்ளை, தார்க்காடு பகுதிகளில் இருந்து பொறுப்பாளர்களும், தோழர்களும் கலந்து கொண்டனர். நங்கவள்ளி பகுதி ஒன்றிய பொறுப்பாளர்கள் கிருஷ்ணன், இராஜேந்திரன் மற்றும் சேலம் மாவட்ட அமைப்பாளர் நங்கவல்லி அன்பு, நங்கவள்ளி பகுதி தலைவர் கண்ணன், செயலாளர் பிரபாகரன் ஆகியோருடன் இணைந்து நங்கவள்ளி பகுதி தோழர்கள் சிறப்பான கூட்ட ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

நங்கவள்ளி பகுதி முழுவதும் நினைவு நாள் சுவரொட்டி ஒட்டப்பட்டது. கூட்டத்தில் கலந்து கொண்ட தோழர்களுக்கு இரவு உணவு ஏற்பாடு செய்யப்பட்டது.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பெரம்பலூர், திருச்சி, திண்டுக்கல், மடத்துக்குளம், பொள்ளாச்சி, கோவை, திருப்பூர், திருச்செங்கோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி, பள்ளிகொண்டா, சங்கராபுரம், அரியலூர், சிவகங்கை, கும்பகோணம், பழனி, மேட்டூர் உள்ளிட்ட பல ஊர்களில் இந்த சந்திப்புகள் நடந்தன.

சூர்யா தயாரித்த ‘ஜெய்பீம்’ திரைப்படத்துக்கு எதிராக மிரட்டல் விடுத்த ஜாதி வெறியினர் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி சென்னை மாநகர காவல்துறையில் சென்னை மாவட்டக் கழகம் சார்பில் மனு அளிக்கப்பட்டது.

1957, நவம்பர் 26, அரசியல் சட்டத்தில் ஜாதியைப் பாதுகாக்கும் பிரிவுகளை பெரியார் ஆணைப்படி எரித்து கழகத் தோழர்கள் சிறைச் சென்றனர். 6 மாதம் முதல் 2 ஆண்ட வரை சிறைத் தண்டனை ஏற்றனர். 20 பேர் மரணமடைந்தனர். அந்த நாளில் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் ஜாதி எதிர்ப்பு உறுதி மொழி ஏற்றனர். சென்னை, கள்ளக்குறிச்சி, மேட்டூர், கோவை திருப்பூர் உள்ளிட்ட ஊர்களில் தோழர்கள் உறுதி ஏற்றனர்.

நவம்பர் 27 அன்று தமிழ் ஈழ விடுதலைக்காக உயிர்த் தியாகம் செய்த மாவீரர்கள் நினைவு நாள் ஆகும். ஆண்டுதோறும் புலிகள் இராணுவப் பயிற்சி பெற்ற கொளத்தூர் அருகே உள்ள புலியூரில் ‘மாவீரர்’ நாள் அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு மெழுகுவர்த்தி ஏற்றி மாவீரர் நாள் நினைவு போற்றப்பட்டது. ஈழ விடுதலையில் திராவிடர் இயக்கத்தின் பங்கு என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி எழுதிய நூலும் வெளியிடப்பட்டது (டிசம். 27).

பெரியார் நினைவு நாளான டிசம்பர் 24 அன்று 2001லிருந்து 2020 வரை ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஏட்டில் விடுதலை இராசேந்திரன் எழுதிய தலையங்கங்கள் 4 தொகுப்புகளாகவும் கோடங்குடி மாரிமுத்து என்ற புனைப் பெயரில் எழுதிய நய்யாண்டி (Satire) எழுத்துகள் ஒரு தொகுப்பாக 1600 பக்கங்களில் சென்னையில் நடந்த நிகழ்வில் வெளியிடப்பட்டது.

**தொகுப்பு : விடுதலை இராசேந்திரன்**

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம்**
**ரூ.250**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

# கோவை மாவட்டக் கழக சார்பில் கழக ஏட்டுக்கு 265 சந்தாக்கள்: கழகத் தலைவரிடம் வழங்கப்பட்டது




திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக பொள்ளாச்சி பகுதியில் பர்வானா அரங்கத்தில் உள்ள மடத்துக்குளம் மோகன் நினைவு அரங்கத்தில் தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் நினைவு நாள் நிகழ்வு திராவிடர் விடுதலைக் கழக மாவட்ட செயலாளர் வெள்ளிங்கிரி தலைமையில் 30.12.2021 அன்று மாலை 6 மணியளவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் ஆனைமலை ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் வினோதினி வரவேற்புரையாற்றி தொடங்கி வைத்தார். கண்ணையன் கொள்கைப் பாடல்களை பாடினார். தமிழ்நாடு திராவிடர் கழகம் கா.சு.நாகராசன், மக்கள் விடுதலை முன்னணி மாரிமுத்து, தமிழ் தேசிய விடுதலை இயக்கம் பாரதி, ஆதித்தமிழர் பேரவை வானுகன் ஆகிய தோழர்கள் கருத்துரை யாற்றினார்கள். சிறப்புரையாக திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி - தந்தை பெரியார் அண்ணல் அம்பேத்கரின் ஒப்பீட்டு ஆய்வுரையை நிகழ்த்தினார்.

7.11.2021 அன்று நடந்த கலந்துரையாடல் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் படி கோவை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்களின் கூட்டு முயற்சியில் நவம்பர் 15 முதல் டிசம்பர் 30 வரை சேர்த்த திராவிடர் விடுதலைக் கழகத்தின் வார ஏடான ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ சந்தா 265 சேர்த்து முதல் தவணை தொகையாக ரூ.30,000/-த்தை மாவட்ட செயலாளர் வெள்ளிங்கிரி, கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் வழங்கினார்.

மடத்துக்குளம் பகுதிகளின் சார்பாக 5 ஆயிரம் ரூபாயை கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் சிவானந்தம் வழங்கினார். இறுதியாக தமிழ்நாடு மாணவர் கழகம்சபரிகிரி நன்றி உரையாற்றினார். நிகழ்வில் ஆசிரியர் சிவகாமி, பாண்டியநாதன், மாதவன் சங்கர், கிருஷ்ணன், அரிதாசு, சிவா ,ஆனந்த், மணி, விவேக், சக்திவேல் சந்தோஷ், திராவிடர் முருகன், விஷ்ணு, பிரபாகரன் உள்ளிட்ட பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசர் மீண்டும் வந்து மக்களை சந்திக்கிறார் அது தான் ஓணம். இப்படி வித்தியாசமான விழாக்களாகக் கூட நாம் மாற்றியமைக்கலாம் என்று கூட ஒரு தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது. அப்படி பொதுவான பண்டிகைகளாக இருந்தாலும் அரசு அலுவலகங்களில் கொண்டாட வேண்டாம் என்று கேரளாவில் தீர்ப்பு வழங்கி இருக்கிறார்கள். பெரியார் அரசு விடுமுறையே கூடாது என்று 1931 விருதுநகர் மாநாட்டில் ‘மத விழாக்களுக்கு விடுமுறை கொடுக் காதீர்கள்’ என்று தீர்மானமே இயற்றியிருக்கிறார். விருப்பமென்றால் கொண்டாடுகிறவர் விடுப்பு எடுத்து செல்லட்டும். இந்துக்கள் அனைவருமா கோகுலாஷ்டமியை கொண்டாடுகிறார்கள்? இந்துக்கள் அனைவருமா ஆவணி அவிட்டத்தில் பூணூல் மாற்றி கொள்கிறார்கள்? ஏனென்றால், மக்கள் தொகையில் 100 இல் 3 இருக்கும் அவர்கள் அதில் பெண்களை தவிர்த்து பூணுல் போடுபவர்கள் முக்கால் பேர் தான் அவர்களுக்காக மீதி 99 விழுக்காட்டினருக்கு ஏன் அரசு விடுப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டார்.

அண்ணாவிடம் பெட்டி சாவி ஒப்படைப்பதாகக் கூறிய ஈரோடு மாநாட்டில் அதே தீர்மானத்தை பெரியார் கொண்டு வருகிறார். அண்ணா முதல்வரான வுடன் கூட ஒரு கோரிக்கையை வைக்கிறார், மத பண்டிகைகளுக்கு அரசு விடுமுறை விடக் கூடாது என்று. ஆனால் 1968இலும் விடுமுறை விடப்படு கிறது. அப்போது, பெரியார், ‘உனக்குப் பே பே, உங்கொப்பனுக்கும் பே பே’ என்ற தலைப்பில், அண்ணாதுரை நமக்கும் பே பே காட்டிவிட்டார் என்று எழுதினார். கேரள அரசு ஆணையை வரவேற்று எழுதிய தலையங்கத்தில் பல செய்திகள் பகிர்ந்து கொள்ளப்பட்டிருக்கிறது.

**(தொடரும்)**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 06th January 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN